©
தமிழ்நாடு அரசு
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 20.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 23] சென்னை, புதன்கிழமை, ஜூன் 11, 2025
வைகாசி 28, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2056

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண்.12/2025.**

**2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தை திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) (a) 5 ஆம் பிரிவைத் தவிர மற்ற அனைத்துப் பிரிவுகளும் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b) 5 ஆம் பிரிவானது,–

(i) இணைப்புப் பட்டியலின் வரிசை எண் 1–ற்கு எதிரான பதிவுகளுடன் தொடர்புடையதாக உள்ளதைப் பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள் முதற்கொண்டு;

(ii) இணைப்புப் பட்டியலின் வரிசை எண் 2–ற்கு எதிரான பதிவுகளுடன் தொடர்புடையதாக உள்ளதைப் பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 ஆம் நாள் முதற்கொண்டு;

(iii) இணைப்புப் பட்டியலின் வரிசை எண்கள் 3, 4 மற்றும் 5–ற்கு எதிரான பதிவுகளுடன் தொடர்புடையதாக உள்ளதைப் பொறுத்தவரை, 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26 ஆம் நாள் முதற்கொண்டு;

(iv) இணைப்புப் பட்டியலின் வரிசை எண் 6–ற்கு எதிரான பதிவுகளுடன் தொடர்புடையதாக உள்ளதைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டு மே திங்கள் 27 ஆம் நாள் முதற்கொண்டு;

(v) இணைப்புப் பட்டியலின் வரிசை எண் 7–ற்கு எதிரான பதிவுகளுடன் தொடர்புடையதாக உள்ளதைப் பொறுத்தவரை, 2022 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 26 ஆம் நாள் முதற்கொண்டு;

(vi) இணைப்புப் பட்டியலின் வரிசை எண் 8–ற்கு எதிரான பதிவுகளுடன் தொடர்புடையதாக உள்ளதைப் பொறுத்தவரை, 2024 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ஆம் நாள் முதற்கொண்டு,

நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2 ஆம் பிரிவில்,– தமிழ்நாடு சட்டம் 14/2019.

(1) (r) கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (t) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(tt) "NMC" என்பது, 2019 ஆம் ஆண்டு தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தின்கீழ் (மையச் சட்டம் 30/2019) அமைத்துருவாக்கப்பட்ட தேசிய மருத்துவ ஆணையம் என்று பொருள்படும்;";

(3) (w) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(w) "தனியார் பல்கலைக்கழகம்" என்பது, 9 ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் என்று பொருள்படும்;";

(4) (y) கூறில், "MCI" எனும் சொற்றொடருக்காக "NMC" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1) மாநிலச் சட்டமன்ற சட்டத்தின் வாயிலாக, ஏதேனும் ஆதரவளிக்கும் அமைப்பின் மூலம், தனியார் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு அரசு அனுமதிக்கலாம்.".

9 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

**4.** முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**"9. "இணைப்புப் பட்டியலில் தனியார் பல்கலைக்கழகத்தைச் சேர்த்தல்.–** ஆதரவளிக்கும் அமைப்பானது, கருத்துரு கடிதத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றியுள்ளது என அரசு மனநிறைவு அடைவதன் பேரில், மாநிலச் சட்டமன்ற சட்டத்தின் வாயிலாக, தனியார் பல்கலைக்கழகத்தின் பெயருடன் சேர்த்து, அதன் அமைவிடம் மற்றும் அதன் ஆதரவளிக்கும் அமைப்பின் விபரங்கள் ஆகியவற்றை, இணைப்புப் பட்டியலில் சேர்த்தல் வேண்டும்.".

இணைப்புப் பட்டியலுக்கான மாற்றீடு.

**5.** முதன்மைச் சட்டத்தின் இணைப்புப் பட்டியலுக்காக, பின்வரும் இணைப்புப் பட்டியலானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

**“இணைப்புப்பட்டியல்.**
**[9 ஆம் பிரிவைக் காண்க]**

| *வரிசை எண்* | *தனியார் பல்கலைக்கழகத்தின் பெயர் மற்றும் அமைவிடம் (முகவரி).* | *ஆதரவளிக்கும் அமைப்பின் பெயர் மற்றும் முகவரி.* | *ஆதரவளிக்கும் அமைப்பின் பதிவு விபரங்கள்.* |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | *(4)* |
| 1. | தனலெஷ்மி சீனிவாசன் பல்கலைக்கழகம், என்.ஹெச்.45, திருச்சி சென்னை பெருவழிச்சாலை, (சமயபுரம் சுங்கச்சாவடி அருகில்), சமயபுரம் அஞ்சல், மண்ணச்சநல்லூர் தாலுகா, திருச்சி மாவட்டம் – 621 112. | திருவாளர். தனலெஷ்மி சீனிவாசன் அறக்கட்டளை மற்றும் கல்வி நிறுவனம், 274/சி, துறையூர் ரோடு, பெரம்பலூர் – 621 212. | தமிழ்நாடு, பெரம்பலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 21.01.1994 அன்று புத்தகம் 4இல், எண். 3/1994, தொகுதி – 38, பக்கங்கள் 111–118– இன் படி அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டது. |
| 2. | ஸ்ரீஅனுசுயா பல்கலைக்கழகம், சென்னை – திருச்சி தேசிய நெடுஞ்சாலை, கீழ்இடையலம் கிராமம் மற்றும் அஞ்சல், திண்டிவனம் தாலுகா, விழுப்புரம் மாவட்டம் – 604 302. | ஆழ்வார்கள் ஆய்வு மையம், எண்–1, முதல் பிரதான சாலை, கஸ்தூரிபாய் நகர், அடையாறு, சென்னை – 600 020. | தமிழ்நாடு, அடையாறு சார்பதிவாளர் அலுவலகத்தில் 12.01.2017 அன்று புத்தகம்–IVஇல், எண் 7/2017 இன் படி அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டது. |
| 3. | ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம். | ஏ.ஆர்.ஆர். அறக்கட்டளை, எண் 31/B, ஜவகர்லால் நேரு சாலை, (100 அடி ரோடு) திருநகர், வடபழனி, சென்னை– 600 026. | தமிழ்நாடு, சென்னை, கோடம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 18.07.2012 அன்று புத்தகம் 4–இல், எண் 525/2012– இன்படி அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டது. |
| 4. | என் எம் வி பல்கலைக்கழகம், முத்துராமலிங்கபுரம் கிராமம், அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம். | வீரையன் சரஸ்வதி அறக்கட்டளை, எண் 103, பழைய எண் 51, சம்பத் நகர், பிரதான சாலை, ஈரோடு– 638 011. | தமிழ்நாடு, ஈரோடு இணை 1–இன், இணை–2 சார்பதிவாளர் அலுவலகத்தில் 27.07.2015 அன்று புத்தகம் IV–இல் எண். 169 / 2015– இன்படி அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டது. |
| 5. | ஜேப்பியார் பல்கலைக்கழகம், செம்மஞ்சேரி கிராமம், சோழிங்கநல்லூர் தாலுகா, சென்னை மாவட்டம் – 600 119. | ஜேப்பியார் கல்வி அறக்கட்டளை, புதிய எண். 29 A, பழைய எண். 12, கணபதி தெரு, இராயபேட்டை, சென்னை–600 014. | தமிழ்நாடு, சென்னை மத்திய இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் 05.05.1987 அன்று புத்தகம் 4, தொகுதி 16, பக்கங்கள் 163 முதல் 173–வரையில், எண்.100/1987– இன்படி அறக்கட்டளையாகப் பதிவு செய்யப்பட்டது. |
| 6. | தக்க்ஷஷீலா பல்கலைக்கழகம், ஒங்கூர் (போஸ்ட்), திண்டிவனம் தாலுகா, விழுப்புரம் மாவட்டம்– 604 305. | மயிலம் சுப்ரமணியசுவாமி நிறுவனம், எண் 54, மீனாட்சி நகர், பூந்தோட்டம், விழுப்புரம் –605 602. | இந்திய அரசின் பெருநிறுவன விவகாரங்கள் துறை, மைய அமைச்சகம், மையப் பதிவு, நிறுமங்களின் பதிவாளர் அலுவலகத்தில் 13.10.2020 அன்று 2013ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டம் (மையச் சட்டம் 18/2013) இன்கீழ் நிறுமமாகப் பதிவு செய்யப்பட்டு, பெருநிறுவன அடையாள எண் U80900TN2020NPL138600 வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 7. | ஜாய் பல்கலைக்கழகம்,<br>ராஜா நகர்,<br>அழங்கானேரி,<br>வடக்கன்குளம்,<br>ராதாபுரம் தாலுகா<br>திருநெல்வேலி மாவட்டம்—627 116. | செல்வம் கல்வி மற்றும் அறக்கட்டளை,<br>ராஜா நகர்,<br>வடக்கன்குளம்,<br>திருநெல்வேலி,<br>தமிழ் நாடு—627 116. | பனங்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் புத்தகம் I தொகுதி 663-இல் எண்.712/ 1985-இன்படி அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டது. |
| 8. | செயின்ட் ஜோசப் பல்கலைக்கழகம்,<br>கீழத்தனூர் கிராமம்,<br>திண்டிவனம் தாலுகா,<br>விழுப்புரம் மாவட்டம்— 604 305. | செயின்ட் அல்போன்சா அறக்கட்டளை, கே.எம்.எம். சி செயின்ட் தேவசகாயம் நகர், முட்டம்—இரணியல் சாலை, முட்டம், கன்னியாகுமரி மாவட்டம் — 629 202. | தமிழ்நாடு, மனவளக்குறிச்சி, வடசேரி, சார் பதிவாளர் அலுவலகத்தில் 30.03.2011 அன்று புத்தகம் IV எண்.76/2011-இன்படி அறக்கட்டளையாக பதிவு செய்யப்பட்டது.''. |

செல்லுந்தன்மை.

6. நீதிமன்றம் எதனின் அல்லது பிற அதிகார அமைப்பு எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், ஜனவரி 20, 2021 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி—II—2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HE/53(a)/2021, பிப்ரவரி 25, 2021 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி—II—2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HE/132(c)/2021, பிப்ரவரி 26, 2021 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி—II—2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HE/132(i)/2021, பிப்ரவரி 26, 2021 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி—II—2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HE/132(j)/2021, பிப்ரவரி 26, 2021 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி—II—2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HE/132(k)/2021, மே 27, 2022 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி—II—2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HE/411(f)/2022, ஜூலை 26, 2022 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி—II—2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HE/609(c)/2022 மற்றும் மார்ச்சு 15, 2024 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி—II—2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எண் II(2)/HE/185(d)/2024 தொடர்பாக, மேற்சொன்ன அறிவிக்கைகள் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ***தமிழ்நாடு அரசிதழில்***, இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதி வரையில், செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட செயல்கள் அல்லது நடவடிக்கைகள் அனைத்தும், நோக்கங்கள் அனைத்திற்காக, 5 ஆம் பிரிவினால் மாற்றாக அமைக்கப்பட்டவாறு இணைப்புப் பட்டியலானது, அத்தகைய செயல்கள் அல்லது நடவடிக்கைகள் செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட அனைத்து தேவையான நேரங்களிலும் நடைமுறையில் இருந்தாற் போன்று சட்டத்திற்கு இணங்க, எப்பொழுதும் செல்லத்தக்கதாக செய்யப்பட்டது அல்லது எடுக்கப்பட்டது என்று கருதப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண்.13/2025.**

**1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் மூலம் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 13/1965.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2 ஆம் பிரிவில்,—

(1) (2) ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2) "தகுதிவாய்ந்த அலுவலர்" என்பது, மாவட்ட ஆட்சியர் என்று பொருள்படும்;";

(2) (4)ஆம் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (6)ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(6) "உரிமம்" என்பது, இந்தச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட உரிமம் என்று பொருள்படும்;".

3, 4 மற்றும் 5 ஆம் பிரிவுகளுக்கான மாற்றீடு.

3. முதன்மைச் சட்டத்தின் 3,4 மற்றும் 5 ஆம் பிரிவுகளுக்காக, பின்வரும் பிரிவுகளானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

**"3. பொதுக் கட்டடங்களுக்கு உரிமம் வழங்கப்படுதல்.—** ஓர் உரிமம் இன்றியும், அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்காமலும் எந்தவொரு கட்டடமும் பொதுக்கட்டடமாக பயன்படுத்தப்படுதல் கூடாது.

**4. உரிமம் வழங்குதல்.—** (1) எந்தவொரு கட்டடத்தையும் ஒரு பொதுக்கட்டடமாக பயன்படுத்தும் எண்ணம் கொண்ட உரிமையாளர் எவரும், ***தமிழ்நாடு அரசிதழில்,*** அரசால் அறிவிக்கப்படலாகும் இணையவழி வலை வாயிலின் வழியாக, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய மின்னணு படிவத்தில், உரிமத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் வேண்டும்.

(2) (1)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் ஒரு பொறியாளரால் வழங்கப்பட்ட தொடர்புடைய கட்டடத்தின் கட்டமைப்பு உறுதித்தன்மை சான்றிதழுடன் சேர்த்து, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணமும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய சான்றிதழ் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கட்டமைப்பு உறுதித்தன்மை சான்றிதழின் உறுதிப்படுத்துதலுக்கு உட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய படிவத்திலும், உரிமம் தானாக உருவாக்கப்பட்டு இணைய வழியாக வழங்கப்படுதல் வேண்டும். கட்டடத்தின் கட்டமைப்பு உறுதித்தன்மையின் பராமரிப்பு மற்றும் அதில் குறித்துரைக்கப்பட்டவாறு பொதுமக்கள் பாதுகாப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் நிறைவேற்றியதற்கு உட்பட்டு, கட்டட உறுதித்தன்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள காலஅளவு, உரிமத்தின் செல்லுபடியாகும் காலஅளவாக இருத்தல் வேண்டும்.

(4) (1) முதல் (3) வரையிலான உட்பிரிவுகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியில் நிலுவையில் உள்ள, உரிமம் வழங்குவதற்கான அல்லது உரிமம் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் எதுவும் அல்லது உரிமம் வழங்குதல் அல்லது புதுப்பித்தல் மறுக்கப்பட்டதற்கு எதிரான மேல்முறையீடு அல்லது சீராய்வு எதுவும், 2024 தமிழ்நாடு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு உடனடிமுன்பு, நடைமுறையில் உள்ளவாறு, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்க தீர்வு செய்யப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, கட்டடத்தின் உரிமையாளர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், நேர்விற்கேற்ப, உரிமம் வழங்குதல் அல்லது புதுப்பித்தல் அல்லது மேல்முறையீடு அல்லது சீராய்விற்கான நிலுவையிலுள்ள அத்தகைய விண்ணப்பத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் இணையவழி வலை வாயிலின் மூலமாக, உரிமத்திற்கான புதிய விண்ணப்பத்தைச் செய்யலாம்.

**5. ஆய்வு.–** (1) தகுதிவாய்ந்த அலுவலரானவர், ஒரு பொதுக் கட்டடத்தின் கட்டமைப்பு உறுதித்தன்மையின் மீதான சந்தேகத்தின் நேர்வில், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், தகுதிவாய்ந்த அலுவலரால் அமைக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப குழுவைக் கொண்டு அத்தகைய பொதுக் கட்டடத்தின் ஆய்வை நடத்தச் செய்தல் வேண்டும்.

(2) அத்தகைய ஆய்விற்குப் பின்பு, தொழில்நுட்ப குழுவானது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில், அத்தகைய காலத்திற்குள்ளும், அத்தகைய முறையிலும் தகுதிவாய்ந்த அலுவலரிடம் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) தொழில்நுட்பக் குழுவின் அறிவிக்கையின் அடிப்படையில், தகுதிவாய்ந்த அலுவலரானவர், கட்டடத்தின் கட்டமைப்பு உறுதித்தன்மையை பராமரிப்பது மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான அத்தகைய பிற வரையறைகள் மற்றும் நிபந்தனைகளை விதிக்கலாம் அல்லது அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய பிற ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.''.

6 மற்றும் 7 ஆம் பிரிவுகளை விட்டுவிடுதல்.

4. முதன்மைச் சட்டத்தின் 6 மற்றும் 7ஆம் பிரிவுகளானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

9 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

6. முதன்மைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவின் (iv) கூறில், ''உரிமம் வழங்கப்பட்டது'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, ''5 ஆம் பிரிவின்கீழ் சுட்டப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அல்லது பிறவாறு'' எனும் சொற்றொடரானது சேர்க்கப்படுதல் வேண்டும். 10 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில்,— 11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத்தலைப்பிற்காக, பின்வரும் ஓரத்தலைப்பானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

**''10 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைக்கெதிரான மேல்முறையீடு—'';**

(2) (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(1) 10 ஆம் பிரிவின்கீழ் தகுதிவாய்ந்த அலுவலரின் ஆணையினால் பாதிக்கப்பட்ட நபரெவரும், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள், வருவாய் நிர்வாக ஆணையரிடம் மேல்முறையீடு செய்யலாம்:

வரம்புரையாக, மேல்முறையீட்டை உரிய காலத்திற்குள் தாக்கல் செய்யாததற்கு மேல்முறையீட்டாளரிடம் போதுமான காரணம் இருப்பதாக மேல்முறையீட்டு அலுவலரானவர், மனநிறைவடைந்தால், அத்தகைய மேல்முறையீடு எதையும் தாக்கல் செய்வதற்கு மேலும், ஒரு மாதத்திற்கு மிகாத கால அவகாசத்தை தனது நீதிமுறை விருப்புரிமையின் படி அனுமதிக்கலாம்.''.

8. முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 12 ஆம் பிரிவினை விட்டுவிடுதல்.

9. முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில், ''வருவாய் வாரியம்'' எனும் சொற்றொடரானது காணப்படுகிற இடங்களில், ''அரசு'' எனும் சொல் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 13 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின், ''5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 14 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

11. முதன்மைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின், (4) ஆம் உட்பிரிவில், ''வருவாய் வாரியம்'' எனும் சொற்றொடருக்காக, ''அரசு'' எனும் சொல் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 15 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

12. முதன்மைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின், (2) ஆம் உட்பிரிவிற்கு பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது:— 16 ஆம் பிரிவிற்கான திருத்தம்..

''(3) பொறியாளர் எவரும், கட்டடத்தினை முறையான ஆய்வு செய்யாமல், கட்டமைப்பு உறுதித்தன்மை சான்றிதழை வழங்கினாலோ அல்லது போதாத அல்லது பொய்யான தரவின் அடிப்படையில் கட்டடத்தின் கட்டமைப்பு உறுதித்தன்மை பற்றி, அறிந்தே தவறான சான்றிதழை வழங்கினாலோ,—

(i) அத்தகைய பொறியாளர், இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மிகாத தண்டத்தொகைக்கு பொறுப்புடையவராகுதல் வேண்டும்;

(ii) அத்தகைய பொறியாளரின் பதிவானது, தொடர்புடைய மாவட்டத்திலுள்ள தகுதிவாய்ந்த அலுவலரால், பராமரிக்கப்படும் பதிவு செய்யப்பட்ட பொறியாளர் தேர்ந்த பெயர்ப்பட்டியலிலிருந்து உடனடியாக நீக்கப்படுதல் வேண்டும்;மற்றும்

(iii) அத்தகைய பொறியாளர், அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகளின்கீழ் பணிகள் எதனையும் மேற்கொள்வதிலிருந்து விலக்கி வைத்தல் வேண்டும்:

வரம்புரையாக, அத்தகைய பொறியாளருக்கு விளக்கமளிப்பதற்கான வாய்ப்பொன்றை வழங்காமல் இந்த உட்பிரிவின்கீழ் ஆணை எதுவும் செய்யப்படுதலாகாது.''.

21 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**13.** முதன்மைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவில், ''இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) 21 ஆம் பிரிவு'' எனும் சொற்றொடருக்காக, ''2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் (மையச் சட்டம் 45/2023) 2 ஆம் பிரிவின் (28) ஆம் கூறு'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

25 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**14.** முதன்மைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின், (3) ஆம் உட்பிரிவின் (a) கூறில் உள்ள, ''புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழ்'' எனும் சொற்றொடருக்காக, ***''தமிழ்நாடு அரசிதழ்''*** எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
***சட்டத்துறை.***

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், ''தமிழ்நாடு அரசு –எதிர்– தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்'' என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண். 14/2025.**

**2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) 2, 6 மற்றும் 7 ஆம் பிரிவுகளானது, 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 16 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் எஞ்சியுள்ள வகைமுறைகள் அனைத்தும் உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/2012. 2. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப்பல்கலைக்கழகச் சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடுவதான) 1 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 1 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

''(1) இந்தச் சட்டம், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர்.ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டம் என வழங்கப்பெறும்.''.

3. முதன்மைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவில், — 7 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

1) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

2) ''அவர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற இரு இடங்களிலும், ''அவர்கள்'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டத்தில், 11 ஆம் பிரிவில்,— 11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (2) ஆம் உட்பிரிவின் (ii) ஆம் இனத்தில், ''மேலாண்மைக்குழு'' எனும் சொற்றொடருக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2—A) எனும் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(2—A) துணை—வேந்தராக நியமிக்கப்படுவதற்கு, குழுவால் பரிந்துரை செய்யப்படும் ஒரு நபரானவர்,—

(i) அதிகபட்ச திறன், நேர்மை, ஒழுக்கம் மற்றும் நிறுவனஅர்ப்பணிப்பு ஆகியவற்றுடன் கூடிய தனிச்சிறப்பு வாய்ந்த கல்வியாளராக இருத்தல் வேண்டும்; மற்றும்

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் பேரில், வேந்தருடன் கலந்தாலோசித்து, அரசால் குறித்துரைக்கப்பட்டவாறான, அத்தகைய கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.''

(3) (2–B) ஆம் உட்பிரிவில், ''மேலாண்மைக் குழு'' எனும் சொற்றொடருக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

துணை வேந்தர் தொடர்ந்து பதவி வகித்தல்.

**5.** இந்தச் சட்டத்தின்படி திருத்தம் செய்யப்பட்டவாறான, முதன்மைச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டம் ***தமிழ்நாடு அரசிதழில்*** உடனடியாக வெளியிடுவதற்கு முன்னர், அவ்வாறு பதவியிலிருந்த தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், அவர் பதவியேற்ற தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலத்திற்கு அல்லது எழுபது வயது நிறைவடையும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை, அத்தகைய துணைவேந்தராக தொடர்ந்து பதவியில் இருப்பார்.

''தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்'' எனும் சொற்றொடருக்கான மாற்றீடு.

**6.** முதன்மைச் சட்டத்தில், ''தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்'' எனும் சொற்றொடருக்காக, அது காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், ''தமிழ்நாடு டாக்டர்.ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

''தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழத்தின்'' மற்றும் ''தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின்" சுட்டுகையின் பொருள்கோள்.

**7.** தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்" மற்றும் "தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டம்" பற்றிய சுட்டுகைகளானது, சட்டம் எதிலும் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, அறிவிக்கை, நடவடிக்கை, ஆணை, ஒழுங்குமுறை விதி, துணை விதி அல்லது பிற முறையாவணம் எதிலும் அல்லது முதன்மைச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது தொடர்ந்து நடைமுறையில் உள்ள நிலை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டால், அவை முறையே, "தமிழ்நாடு டாக்டர். ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்" மற்றும் "தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டம்" ஆகியவற்றின் சுட்டுகைகளாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
***சட்டத்துறை.***

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், "தமிழ்நாடு அரசு –எதிர்– தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்" என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண். 15/2025.**

**1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 42/1989.

49—ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 49—ஆம் பிரிவில்,—

(1) ‘‘வேந்தர்’’ எனும் சொல் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ‘‘அவர்’’ என்ற சொல் வருகிற மூன்று இடங்களிலும் மற்றும் ‘‘அவருடைய’’ எனும் சொல் வருகிற இரண்டு இடங்களிலும், முறையே, ‘‘அவர்கள்’’ மற்றும் ‘‘அவர்களுடைய’’ எனும் சொற்களனாது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், "தமிழ்நாடு அரசு –எதிர்– தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்" என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண்.16/2025.**

**தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**பகுதி-I.**
**முன்னுரை.**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி-II.**
**1965-ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 33/1965.

11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1965–ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்தின் (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 33/1965 என சுட்டப்படுவதான) 11–ஆம் பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

11–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. 1965–ஆம் ஆண்டு சட்டத்தின் 11–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**11-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது.–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

**பகுதி-III.**

**1978-ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. 1978–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் 11–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 30/1978 என சுட்டப்படுவதான),– தமிழ்நாடு சட்டம் 30/1978.

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில் ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கான முதலாம் வரம்புரையில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (4–A) மற்றும் (4–B) எனும் உட்பிரிவுகளானவை விட்டுவிடப்படுதல் வேண்டும்.

11–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. 1978–ஆம் ஆண்டு சட்டத்தின் 11–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

**"11–A. துணைவேந்தரை நீக்குதல்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

**பகுதி-IV.**

**1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 1/1982.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** 1981–ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 1/1982 என சுட்டப்படுவதான),–

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) "வேந்தர்" எனும் சொல்லுக்காக, "அரசு" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், "வேந்தர்" மற்றும் "அவர்" எனும் சொற்களுக்காக, முறையே, "அரசு" மற்றும் "அவர்கள்" எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில், "வேந்தர்" எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், "அரசு" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கான, இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில் உள்ள "வேந்தர்" எனும் சொல்லுக்காக, "அரசு" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

12–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**7.** தமிழ்நாடு சட்டம் 1/1982–இன் 12–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**12–A. துணைவேந்தரை நீக்குதல்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

## பகுதி-V.

### 1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. 1981–ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 2/1982 என சுட்டப்படுவதான),– தமிழ்நாடு சட்டம் 2/1982.

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கான, இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில் உள்ள ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

12–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

9. தமிழ்நாடு சட்டம் 2/1982–இன் 12–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"12–A. **துணைவேந்தரை நீக்குதல்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது.–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

## பகுதி-VI.

## 1984-ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 15/1984.

10. 1984–ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 15/1984 என சுட்டப்படுவதான),– 12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கான, இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில் உள்ள ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

11. 1984–ஆம் ஆண்டு சட்டத்தின் 12–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 12–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"**12-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

## பகுதி-VII.

## 1985-ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 23/1985.

12. 1985–ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் 13–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 23/1985 என சுட்டப்படுவதான),– 13–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில்,—

(i) ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ‘‘வேந்தர்’’ மற்றும் ‘‘அவர்’’ எனும் சொற்களுக்காக, முறையே, ‘‘அரசு’’ மற்றும் ‘‘அவர்கள்’’ எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2—D)—ஆம் உட்பிரிவில் ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (3)—ஆம் உட்பிரிவிற்கான, இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில் உள்ள ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

13—A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

13. 1985—ஆம் ஆண்டு சட்டத்தின் 13—ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

“**13-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .—

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது
(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

## பகுதி-VIII.

## 1990-ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

11—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

14. 1990—ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11—ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 31/1990 என சுட்டப்படுவதான),— தமிழ்நாடு சட்டம் 31/1990.

(1) (1) ஆம் உட்பிரிவில்,—

(i) ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ‘‘வேந்தர்’’ மற்றும் ‘‘அவர்’’ எனும் சொற்களுக்காக, முறையே, ‘‘அரசு’’ மற்றும் ‘‘அவர்கள்’’ எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில், ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கான, இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில் உள்ள ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

15. 1990–ஆம் ஆண்டு சட்டத்தின் 11–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 11–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

“**11-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது
(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

## பகுதி-IX.

## 1997-ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 45/1997.

16. 1997–ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 45/1997 என சுட்டப்படுவதான),– 12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ‘‘வேந்தர்’’ மற்றும் ‘‘அவர்’’ எனும் சொற்களுக்காக, முறையே, ‘‘அரசு’’ மற்றும் ‘‘அவர்கள்’’ எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில், ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கான, இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில் உள்ள ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

12–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

17. 1997–ஆம் ஆண்டு சட்டத்தின் 12–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**12-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

**பகுதி-X.**

**2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

10–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

18. 2002–ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 10–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 27/2002 என சுட்டப்படுவதான),– தமிழ்நாடு சட்டம் 27/2002.

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில் ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கான, முதலாம் வரம்புரையில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

10–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

19. தமிழ்நாடு சட்டம் 27/2002–இன் 10–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**10-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

**பகுதி-XI.**

**2002-ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

தமிழ்நாடு சட்டம் 32/2002.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

20. 2002–ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 12–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 32/2002 என சுட்டப்படுவதான),–

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில் ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கான, முதலாம் வரம்புரையில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

12–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

21. தமிழ்நாடு சட்டம் 32/2002–இன் 12–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**12-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது
(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

**பகுதி-XII.**

**2008-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

10–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

22. 2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 10–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 33/2008 என சுட்டப்படுவதான),– தமிழ்நாடு சட்டம் 33/2008.

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (4)–ஆம் உட்பிரிவிற்கான, முதலாம் வரம்புரையில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

10–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

23. 2008–ஆம் ஆண்டு சட்டத்தின் 10–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**10-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

## பகுதி-XIII.

## 2013-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 20/2013.

9–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

24. 2013–ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 9–ஆம் பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 20/2013 என சுட்டப்படுவதான),–

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ‘‘வேந்தர்’’ மற்றும் ‘‘அவர்’’ எனும் சொற்களுக்காக, முறையே, ‘‘அரசு’’ மற்றும் ‘‘அவர்கள்’’ எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2–D)–ஆம் உட்பிரிவில் ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3)–ஆம் உட்பிரிவிற்கான, முதலாம் வரம்புரையில், ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (6) மற்றும் (7)–ஆம் உட்பிரிவுகளானவை விட்டுவிடப்படுதல் வேண்டும்.

9–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

25. தமிழ்நாடு சட்டம் 20/2013–இன் 9–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“**9-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும்,

அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும். " .

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், ‘‘தமிழ்நாடு அரசு –எதிர்– தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்"என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 17/2025.**

**1996 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1997.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1996–ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 12 ஆம் பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) வரம்புரையில், ‘‘வேந்தர்’’ மற்றும் ‘‘அவர்’’ எனும் சொற்களுக்காக, முறையே, ‘‘அரசு’’ மற்றும் ‘‘அவர்கள்’’ எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (3)–ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில், ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

13–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுத்தல் வேண்டும், அதாவது:–

‘‘(1) துணை வேந்தர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுக்கிறார் அல்லது செயல்படுத்தாமல் இருக்கிறார் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துகிறார் அல்லது நெறிதவறி நடக்கிறார் அல்லது தவறாக நிர்வகிக்கிறார் அல்லது அவரது நடத்தை ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கியதாக இருக்கிறது என்று அரசு கருதுமாயின், அல்லது பிறவாறாக, துணை வேந்தர் அவரது பதவியில் தொடர்ந்திருப்பது பல்கலைக்கழகத்தின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் என்று அரசுக்கு தோன்றுமாயின், அரசானது, அப்பொருட்பாடு குறித்து விசாரணை செய்வதற்கு மூன்றுக்கும் குறையாத உறுப்பினர்களைக் கொண்டிருக்கிற குழு ஒன்றினை அமைத்துருவாக்கலாம்.".

(2) (2) ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், "தமிழ்நாடு அரசு –எதிர்– தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்"என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 18/2025.**

**1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர், மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர். எம்.ஜிஆர், மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என சுட்டப்படுவதான) 10 ஆம் பிரிவில்,– 10–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 37/1987.

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) அந்த வரம்புரையில், ‘‘வேந்தர்’’ மற்றும் ‘‘அவர்’’ எனும் சொற்களுக்காக, முறையே, ‘‘அரசு’’ மற்றும் ‘‘அவர்கள்’’ எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (5) ஆம் உட்பிரிவில், ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

3. முதன்மைச் சட்டத்தின், 10–ஆம் பிரிவிற்கு பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 10–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

“**10-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும், அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், “தமிழ்நாடு அரசு –எதிர்– தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்" என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 19/2025.**

**1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 8/1971.

11–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

2. 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11–ஆம் பிரிவில்,–

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(i) “வேந்தர்” எனும் சொல்லுக்காக, “அரசு” எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) வரம்புரையில், “வேந்தர்” மற்றும் “அவர்” எனும் சொற்களுக்காக, முறையே, “அரசு” மற்றும் “அவர்கள்” எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (2) ஆம் உட்பிரிவில், (i) ஆம் இனத்தில், “வேந்தர்” எனும் சொல்லுக்காக, “அரசு” எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (2–D) ஆம் உட்பிரிவில், “வேந்தர்” எனும் சொல்லுக்காக, அவை காணப்படுகின்ற மூன்று இடங்களில், “அரசு” எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (3) ஆம் உட்பிரிவின் முதலாம் வரம்புரையில்,–

(i) (a) ஆம் கூறில், “வேந்தர்” எனும் சொல்லுக்காக, “அரசு” எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (b) கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(b) துணை வேந்தர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுக்கிறார் அல்லது செயல்படுத்தாமல் இருக்கிறார் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துகிறார் அல்லது நெறிதவறி நடக்கிறார் அல்லது தவறாக நிர்வகிக்கிறார் அல்லது அவரது நடத்தை ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கியதாக இருக்கிறது என்று அரசு கருதுமாயின், அல்லது பிறவாறாக, துணை வேந்தர் அவரது பதவியில் தொடர்ந்திருப்பது பல்கலைக்கழகத்தின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் என்று அரசுக்கு தோன்றுமாயின், அரசானது,–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும், அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும்.''.

(5) (4) ஆம் உட்பிரிவிற்காக, பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது;—

''(4) துணைவேந்தர், பதவியில் தற்காலிகக் காலியிடம் எதுவும் ஏற்படும்போதோ, அல்லது துணைவேந்தரின் வருகையின்மை காரணத்தினாலோ அல்லது பிற காரணம் எதனினாலோ, அவரது பதவியின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், கடமைகளைப் புரிவதற்கும் துணைவேந்தர் இயலாதிருக்கும்போது மேலாண்மை வாரியமானது, கூடிய விரைவில், துணைவேந்தரின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும், கடமைகளைப் புரிவதற்கும் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், "தமிழ்நாடு அரசு –எதிர்– தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்'' என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 20/2025.**

**1982-ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/1982.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1982–ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 12–ஆம் பிரிவில்,–

(1) (1)ஆம் உட்பிரிவில்,–

(a) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) அந்த வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில்,–

(a) (i) ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(i) அரசால் நியமனம் செய்யப்படும் இருவரில், ஒருவர், உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும் மற்றொருவர், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பதவியிலுள்ள அலுவலராகவோ அல்லது சிறந்த கல்வியாளராகவோ இருத்தல் வேண்டும்'';

(b) (ii) ஆம் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (2–A)–ஆம் உட்பிரிவின், (ii) ஆம் கூறில், ''வேந்தருடன் கலந்தாய்வு செய்து'' எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) (2–B)–ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5) (2–D)–ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(6) (3)–ஆம் உட்பிரிவின், இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(7) (4)–ஆம் உட்பிரிவில், ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

12–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டத்தின் 12–ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“**12-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய நபர் ஒருவரினால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும், அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு, மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம், ஏதேனும் இருப்பின், அதனை நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்க கோருதல் வேண்டும்.’’.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், "தமிழ்நாடு அரசு –எதிர்– தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்" என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண். 21/2025.**

**2012-ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

11–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்,

தமிழ்நாடு சட்டம் 21/2012.

2. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 11 ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(a) ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) வரம்புரையில், ‘‘வேந்தர்’’ மற்றும் ‘‘அவர்’’ எனும் சொற்களுக்காக, முறையே, ‘‘அரசு’’ மற்றும் ‘‘அவர்கள்’’ எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (2–D) ஆம் உட்பிரிவில், ‘‘வேந்தர்’’ எனும் சொல்லுக்காக, அவை காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ‘‘அரசு’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3) ஆம் உட்பிரிவின் முதலாம் வரம்புரைக்காக, பின்வரும் வரம்புரையானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

‘‘வரம்புரையாக —

(a) துணை வேந்தர், அரசுக்கு முகவரியிட்டு, தாம் கையொப்பமிட்டு எழுத்து வாயிலாக இரண்டு மாத முன்னறிவிப்பு கொடுத்ததற்குப் பின்பு தனது பதவியை விட்டு விலகலாம்;

(b) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் அவரின் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்ய முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது .–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரினால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும், அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம் ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்கக் கோருதல் வேண்டும்.''.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், "தமிழ்நாடு அரசு –எதிர்– தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்" என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:–

**சட்ட எண்.22/2025.**

**1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

11–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 42/1989.

2. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படுவதான) 11 ஆம் பிரிவில்,—

(1) (1) ஆம் உட்பிரிவில்,–

(a) ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) அதன் வரம்புரையில், ''வேந்தர்'' மற்றும் ''அவர்'' எனும் சொற்களுக்காக, முறையே, ''அரசு'' மற்றும் ''அவர்கள்'' எனும் சொற்களானவை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (2) ஆம் உட்பிரிவில்,–

(a) (i) ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(i) அரசால் நியமனம் செய்யப்படும் இருவரில், ஒருவர், உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும் மற்றொருவர், அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத மாநில அரசின், ஓய்வு பெற்ற அல்லது பதவியிலுள்ள அலுவலராகவோ அல்லது சிறந்த கல்வியாளராகவோ இருத்தல் வேண்டும்'';

(b) (ii) ஆம் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(3) (2–A)–ஆம் உட்பிரிவில், (ii) ஆம் கூறில், ''வேந்தருடன் கலந்தாய்வு செய்து'' எனும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) (2–B)–ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொல்லானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(5) (2–D)–ஆம் உட்பிரிவில், ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, அது காணப்படுகின்ற மூன்று இடங்களிலும், ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(6) (3)–ஆம் உட்பிரிவின், இரண்டாம் வரம்புரையில், (a) மற்றும் (b) கூறுகளில் உள்ள, ''வேந்தர்'' எனும் சொல்லுக்காக, ''அரசு'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

11–A எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**3.** முதன்மைச் சட்டத்தின் **11–**ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"**11-A. துணைவேந்தரை நீக்குதல்.-** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை வேண்டுமென்றே மேற்கொள்ள மறுத்தல் அல்லது செயல்படுத்தாமல் இருத்தல் அல்லது அவரிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்துதல் போன்ற காரணத்தின் பேரில் அரசால் பிறப்பிக்கப்பட்ட ஓர் ஆணையினாலன்றி, துணைவேந்தரானவர் அவரின் பதவியிலிருந்து நீக்கப்படுதல் ஆகாது. துணைவேந்தரை பதவி நீக்கம் செய்வதற்கு முன்மொழியப்பட்ட நேர்வில், அரசானது.–

(i) உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக; அல்லது

(ii) அரசு தலைமைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத அரசு அலுவலராக,

இருந்த அல்லது இருக்கிற அத்தகைய ஒருவரால் விசாரணை ஒன்றை மேற்கொள்ள ஆணையிடுதல் வேண்டும், அதில் துணைவேந்தருக்கு விளக்கம் ஒன்றை அளிப்பதற்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். விசாரணை அறிக்கையினை கருத்தில் கொண்டு, துணைவேந்தருக்கு விசாரணை அறிக்கையின் நகல் ஒன்று அளிக்கப்பட்டு மற்றும் அதன் மீது அவரது மேல் விளக்கம் ஏதேனும் இருப்பின், அதனை, நீக்கத்திற்கான ஆணை ஒன்றினை செய்வதற்கு முன்பு, சமர்ப்பிக்கக் கோருதல் வேண்டும்.".

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

11 ஏப்ரல்2025 தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி II—2ஆம் பிரிவின் 1 மற்றும் 2ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட, 11 ஏப்ரல் 2025 தேதியிட்ட சட்டத்துறை அறிவிக்கை எண்.II(2)/ சட்டம்/304(a)/2025—ல் பின்வரும் மாறுதல்கள் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது:—

**அறிவிக்கை.**

2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, (சட்டமன்ற பேரவை சட்ட முன்வடிவு எண்.48/2022) 19 அக்டோபர் 2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றப்பட்டு ஆளுநரின் ஒப்புதலுக்காக அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது என்பதாலும்;

மற்றும் கூறப்பட்ட சட்டமுன்வடிவிற்கு 13 நவம்பர் 2023 அன்று ஆளுநர் இசைவளிக்க மறுத்தார் என்பதாலும்;

மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18 நவம்பர் 2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்மொழியப்பட்ட தீர்மானம், ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் கூறப்பட்ட சட்டமுன்வடிவு மறுபரிசீலனை செய்யப்பட்டு எந்தவித மாறுதலுமின்றி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மீண்டும் நிறைவேற்றப்பட்டது என்பதாலும்;

மற்றும் கூறப்பட்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.48/2022, 18 நவம்பர் 2023 அன்று மாண்புமிகு ஆளுநரிடம் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது, அவர் அந்தச் சட்டமுன்வடிவை 28 நவம்பர் 2023 அன்று மாண்புமிகு குடியரசுத்தலைவரின் பரிசீலனைக்காக அனுப்பியிருந்தார் என்பதாலும்;

மற்றும், மாண்புமிகு குடியரசுத்தலைவர் அவர்கள், கூறப்பட்ட சட்டமுன்வடிவிற்கு 18 பிப்ரவரி 2024 அன்று ஒப்புதல் வழங்கினார், அது தமிழ்நாடு சட்டம் 10/2024 ஆக 07 மார்ச் 2024 தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழின் பகுதி—IV—ல் பிரிவு 2இல் வெளியிடப்பட்டது மற்றும் மேற்கூறிய சட்டம் மேற்கூறிய தேதியன்று, அதாவது, 07 மார்ச் 2024 அன்று நடைமுறைக்கு வந்து விட்டது என்பதாலும்;

மற்றும் மாண்பமை உச்சநீதிமன்றம், நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண்.1239/2023—இல் 08.04.2025 தேதியிட்ட அதன் தீர்ப்பில், மேற்கூறிய சட்டமுன்வடிவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய தேதிக்கு பின்பு அவர் எடுத்திருக்கக்கூடிய அனைத்து விளைவுறு நடவடிக்கைகளும் சட்டத்தின்படி இல்லா நிலையது என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாலும், மேற்கூறிய சட்ட முன்வடிவு ஆளுநரின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட தேதியில் அதாவது தமிழ்நாடு சட்டமன்ற பேரவையால் மறுபரிசீலனை செய்யப்பட்ட பின்பு, அதாவது 18 நவம்பர் 2023 அன்று மேற்கூறிய சட்ட முன்வடிவு ஆளுநரால் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதாலும்;

மற்றும் 08.04.2025 தேதியிட்ட மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தின் மேற்கூறிய தீர்ப்பின் அடிப்படையில் கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 10/2024 ஆனது சட்டத்தின்படி இல்லா நிலையது ஆகும்.

எனவே, தற்போது, மாண்பமை இந்திய உச்சநீதிமன்றம், இந்திய அரசமைப்பின் 142 ஆம் உறுப்பின்கீழ், "தமிழ்நாடு அரசு —எதிர்— தமிழ்நாடு ஆளுநர் மற்றும் ஒருவர்" என்ற வழக்கில், நீதிப்பேராணை மனு (உரிமையியல் ) எண். 1239/2023 இல், 8 ஏப்ரல் 2025 அன்று வழங்கிய தீர்ப்பின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றதாகக் கருதப்படுகிறது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண்.23/2025.**

**தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தி மூன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**பகுதி-I.**
**முன்னுரை.**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**பகுதி-II.**
**1965 —ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

10—ஆம் பிரிவிற்கான திருத்தம்,

தமிழ்நாடு சட்டம் 33/1965.

2. 1965—ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (இதன்பின்பு இந்தப் பகுதியில் 1965—ஆம் ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான), (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

19—ஆம் பிரிவிற்கான திருத்தம்,

3. 1965 ஆம் ஆண்டு சட்டத்தின் 19—ஆம் பிரிவில்,—

(1) (a) கூறில், ''வகை I— பதவி வழி உறுப்பினர்கள்.'', எனும் தலைப்பின் கீழ்,—

(i) (1) ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (1—AAA) இனமானது. (1—AAAA) இனமாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு மறு எண்ணிடப்பட்ட (1—AAAA) இனத்திற்கு முன்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(1—AAA) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்;'';

(2) (aa) கூறில்,—

(i) ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

**பகுதி-III.**
**1978-ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.**

17—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 30/1978.

4. 1978—ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் 17—ஆம் பிரிவில் ,—

(1) (2) — ஆம் உட்பிரிவில், ''வகை I— பதவி வழி உறுப்பினர்கள்.'', எனும் தலைப்பின் கீழ், (d) இனத்திற்குப் பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(dd) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்:";

(2) (4)—ஆம் உட்பிரிவில், (i) கூறில், "சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்" எனும் சொற்றொடருக்கு பின்பு, "அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

## பகுதி-IV.

### 1981-ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 1/1982.

11—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. 1981—ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (இதன்பின்பு இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 1/1982 என குறிப்பிடப்படுவதான), (1) ஆம் உட்பிரிவில், "கல்வி" எனும் சொல்லுக்காக, "உயர்க்கல்வி" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

24—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. தமிழ்நாடு சட்டம் 1/1982—இன், 24—ஆம் பிரிவில்,—

(1) (b) கூறில், "வகை I— பதவி வழி உறுப்பினர்கள்." எனும் தலைப்பின் கீழ்,—

(i) (1)—ஆம் இனத்தில், "கல்வி" எனும் சொல்லுக்காக, "உயர்க்கல்வி" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (1—AA) இனத்திற்குப் பின்பு. பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"(1—AAA) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்;";

(d) கூறில்,—

(i) "கல்வி" எனும் சொல்லுக்காக, "உயர்கல்வி" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) "சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்" எனும் சொற்றொடருக்கு பின்பு, "அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்" எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

32—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. தமிழ்நாடு சட்டம் 1/1982—இன், 32—ஆம் பிரிவின், (1) —ஆம் உட்பிரிவில், (iii) ஆம் இனத்தில், "கல்வி" எனும் சொல்லுக்காக, "உயர்கல்வி" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி-V.

### 1981-ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 2/1982.

11—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. 1981—ஆம் ஆண்டு பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 2/1982 என குறிப்பிடப்படுவதான), (1) ஆம் உட்பிரிவில், "கல்வி" எனும் சொல்லுக்காக, "உயர்கல்வி" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

24–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. தமிழ்நாடு சட்டம் 2/1982–இன் 24–ஆம் பிரிவில்,–

(b) கூறில், ‘‘வகை I– பதவி வழி உறுப்பினர்கள்.’’, எனும் தலைப்பின் கீழ்,–

(i) (1) ஆம் இனத்தில், ‘‘கல்வி’’ எனும் சொல்லுக்காக, ‘‘உயர்கல்வி’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (1–AA) இனத்திற்குப் பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

‘‘(1–AAA) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்;’’;

(2) (d) கூறில், –

(i) ‘‘கல்வி’’ எனும் சொல்லுக்காக, ‘‘உயர்கல்வி’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ‘‘சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்’’ எனும் சொற்றொடருக்கு பின்பு, ‘‘அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்’’ எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

32–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. தமிழ்நாடு சட்டம் 2/1982–இன், 32–ஆம் பிரிவின், (1) –ஆம் உட்பிரிவில், (iii) ஆம் இனத்தில், ‘‘கல்வி’’ எனும் சொல்லுக்காக, ‘‘உயர்கல்வி’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி-VI.

## 1984-ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

11. 1984–ஆம் ஆண்டு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் 1984–ஆம் ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான), (1) ஆம் உட்பிரிவில், ‘‘கல்வி’’ எனும் சொல்லுக்காக, ‘‘உயர்கல்வி’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 15/1984.

20–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

12. 1984–ஆம் சட்டத்தின் 20–ஆம் பிரிவில்,

(1) (a)–கூறில், ‘‘வகை I– *பதவி வழி* உறுப்பினர்கள்.’’, எனும் தலைப்பின் கீழ், (4)–ஆம் இனத்தில், ‘‘கல்வி’’ எனும் சொல்லுக்காக, ‘‘உயர்கல்வி’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (b) கூறில், ‘‘கல்வி’’ எனும் சொல்லுக்காக, ‘‘உயர்கல்வி’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

23 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

13. 1984–ஆம் ஆண்டு சட்டத்தின் 23–ஆம் பிரிவில்,–

(1) (b) கூறில், ‘‘வகை I– *பதவி வழி* உறுப்பினர்கள்.’’, எனும் தலைப்பின் கீழ், (1)–ஆம் இனத்தில், ‘‘கல்வி’’ எனும் சொல்லுக்காக, ‘‘உயர்கல்வி’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (d) கூறில், ‘‘கல்வி’’ எனும் சொல்லுக்காக, ‘‘உயர்க்கல்வி’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

31–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

14. 1984–ஆம் ஆண்டு சட்டத்தின் 31–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (c) இனத்தில், ‘‘கல்வி’’ எனும் சொல்லுக்காக, ‘‘உயர்கல்வி’’ எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி-VII.

## 1985-ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 23/1985.

12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. 1985–ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக்கழகச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (இதன்பின்பு இந்தப் பகுதியில், 1985 ஆம் ஆண்டுச் சட்டம் என குறிப்பிடப்படுவதான), (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

21–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

16. 1985–ஆம் ஆண்டு சட்டத்தின் 21–ஆம் பிரிவில்,–

(1) (a) கூறில், ''வகை I– *பதவி வழி* உறுப்பினர்கள்.'', எனும் தலைப்பின் கீழ், (4) ஆம் இனத்தில் ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (b) கூறில், (i) ஆம் உட்கூறில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

25–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

17. 1985–ஆம் ஆண்டு சட்டத்தின் 25–ஆம் பிரிவில்,–

(1) (b) கூறில், ''வகை II– *பதவி வழி* உறுப்பினர்கள்.'', எனும் தலைப்பின் கீழ்,–

(i) (1)–ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (2–A) இனத்திற்குப் பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(2–AA) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்;'';

(2) (d) கூறில், (i) ஆம் உட்கூறில்,–

(i) ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

33 ஆம் பிரிவிற்கான திருத்தம்

18. 1985–ஆம் ஆண்டு சட்டத்தின் 33–ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில், (iii) ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி-VIII.

## 1990-ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

10–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 31/1990.

19. 1990–ஆம் ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் 1990–ஆம் ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான), (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

23–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**20.** 1990–ஆம் ஆண்டு சட்டத்தின் 23–ஆம் பிரிவில்,–

(1) (b) கூறில், ''வகை I– *பதவி வழி* உறுப்பினர்கள்.'', எனும் தலைப்பின் கீழ்,–

(i) (1)–ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (3)–ஆம் இனத்திற்குப் பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(3–A) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்;'';

(d) கூறில்,–

(i) ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

31–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**21.** 1990–ஆம் ஆண்டு சட்டத்தின் 31–ஆம் பிரிவின், (1)–ஆம் உட்பிரிவில், (iii)–ஆம் இனத்தில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி-IX.

## 1997-ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**22.** 1997–ஆம் ஆண்டு பெரியார் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் 1997–ஆம் ஆண்டு சட்டம் என குறிப்பிடப்படுவதான), (1) ஆம் உட்பிரிவில், ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 45/1997.

24–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**23.** 1997–ஆம் ஆண்டு சட்டத்தின் 24–ஆம் பிரிவில்,–

(1) (b) கூறில், ''வகை I – *பதவி வழி* உறுப்பினர்கள்'', எனும் தலைப்பின் கீழ், (3)–ஆம் இனத்திற்கு பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(3–A) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்;'';

(2) (d) கூறில், ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

## பகுதி-X.

## 2002-ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

9–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**24.** 2002–ஆம் ஆண்டு திறந்த நிலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின், (1) ஆம் உட்பிரிவில் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 27/2002 என குறிப்பிடப்படுவதான), ''கல்வி'' எனும் சொல்லுக்காக, ''உயர்கல்வி'' எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 27/2002.

25. தமிழ்நாடு சட்டம் 27/2002–இன் 20–ஆம் பிரிவில்,– 20–ஆம் பிரிவிற்கான திருத்தம்,

(1) (2)–ஆம் உட்பிரிவில், "வகை I – *பதவி வழி* உறுப்பினர்கள்.", எனும் தலைப்பின் கீழ், (a) இனத்திற்கு பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(aa) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்;";

(2) (2)–ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(2–A) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளரானவர், காரணம் எதற்காகவும் ஆட்சிக் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாதிருக்கும் நேர்வில், அவர், கூட்டங்களில் கலந்துகொள்ள அரசு துணைச் செயலாளரின் படிநிலைக்கு குறையாத, அவரது துறையின் அலுவலர் எவரையும் மாற்றாக அனுப்பலாம். அவ்வாறு மாற்றியனுப்பப்பட்ட அலுவலரானவர் கூட்டத்தின் விவாதங்களில் கலந்து கொள்ள உரிமை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் வாக்களிக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.".

## பகுதி-XI.

## 2002-ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

தமிழ்நாடு சட்டம் 32/2002.

26. 2002–ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் (இதன்பின்பு, இந்தப் பகுதியில் தமிழ்நாடு சட்டம் 32/2002 என குறிப்பிடப்படுவதான), (1) ஆம் உட்பிரிவில், "கல்வி" எனும் சொல்லுக்காக, "உயர்கல்வி" எனும் சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 11–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

27. தமிழ்நாடு சட்டம் 32/2002–இன், 23–ஆம் பிரிவில்,– 23–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (b) கூறில், (1)–ஆம் இனத்திற்கு பின்பு பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(1–A) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்;";

(2) (c) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(cc) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளரானவர், காரணம் எதற்காகவும் ஆட்சிக் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாதிருக்கும் நேர்வில், அவர், கூட்டங்களில் கலந்துகொள்ள அரசு துணைச் செயலாளரின் படிநிலைக்கு குறையாத அவரது துறையின் அலுவலர் எவரையும் மாற்றாக அனுப்பலாம். அவ்வாறு மாற்றியனுப்பப்பட்ட அலுவலரானவர் கூட்டத்தின் விவாதங்களில் கலந்து கொள்ள உரிமை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் வாக்களிக்கும் உரிமை கொண்டிருத்தல் வேண்டும்".

## பகுதி-XII.

## 2013-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்திற்கான திருத்தங்கள்.

19–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

28. 2013–ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 19–ஆம் பிரிவில்,– தமிழ்நாடு சட்டம் 20/2013.

(1) (2)–ஆம் உட்பிரிவில், ''வகை I – *பதவி வழி* உறுப்பினர்கள்'', எனும் தலைப்பின் கீழ், (c) இனத்திற்கு பின்பு, பின்வரும் இனமானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(cc) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்;'';

(2) (4)–ஆம் உட்பிரிவில், (a) கூறில் ''சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண்.24/2025.**

**2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்தைந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும். — குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 20/2017. — 2. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2 ஆம் பிரிவில்,— — 2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(a) (8) ஆம் கூறில், ''அனுமதிக்கான கட்டணம்'' எனும் சொற்றொடருக்குப் பின்பு, பின்வரும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''அல்லது நிறுவனம் எதனின் வளாகத்திலும் அல்லது நுழைவுச்சீட்டு அல்லது பங்களிப்பு அல்லது சந்தா அல்லது எந்த முறையிலேனும் வசூலிக்கப்படும் பிற கட்டணங்கள் எவற்றின் மூலமும் நபர்களின் அனுமதிக்காக கட்டணம் செலுத்த வேண்டிய பிற இடம் எதனிலும் நடத்தப்படும் இசை நிகழ்ச்சி, நாடகம், காட்சி அல்லது பிற நிகழ்ச்சி எதிலும்.'' ;

(b) (10) ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(10) ''நிறுவனம்'' என்பது, எந்தவொரு கல்வி நிறுவனம் அல்லது நிறுமம், சங்கம், குழுமம் அல்லது எப்பெயரிலும் அழைக்கப்படும் நபர்களின் பிற கழகம் எதனையும் உள்ளடக்கும்;'';

(c) (11) ஆம் கூறுக்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''(11) ''உள்ளாட்சி அமைப்பு'' என்பது, கேளிக்கைக்கு வகைசெய்யப்பட்டுள்ள அதிகார வரம்புள்ள 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 9/1999) அமைத்துருவாக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒரு மாநகராட்சி அல்லது ஒரு நகராட்சி மன்றம் அல்லது ஒரு பேரூராட்சி அல்லது 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 21/1994) அமைத்துருவாக்கப்பட்ட ஊராட்சி என்று பொருள்படும்;'';

(d) (16) ஆம் கூறில், ''பிற விளையாட்டுத் தொடரை நடத்தும் எந்த நபரும் அல்லது நபர்களின் அமைப்பும்'' எனும் சொற்றொடருக்கு பின்பு, ''அல்லது இசைநிகழ்ச்சி, நாடகம், காட்சி எதனையும் அல்லது பிற நிகழ்ச்சி எதனையும் நடத்தும், எந்த நபரும் அல்லது நபர்களின் அமைப்பும்'' எனும் சொற்றொடரானது உட்புகுத்தப்படுதல் வேண்டும்.

3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில்,–

(a) (1) ஆம் உட்பிரிவின் (h) இனத்திற்குப் பின்பு, பின்வரும் இனம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(i) நிறுவனம் எதனின் வளாகத்திலும் அல்லது பிற இடங்கள் எதனிலும் நடத்தப்படும் இசைநிகழ்ச்சி, நாடகம், காட்சி எதுவும் அல்லது பிற நிகழ்ச்சி எதுவும்.”;

(b) (2) ஆம் உட்பிரிவில்,–

(i) (i) கூறில், இரு இடங்களில் காணப்படுகின்ற, “சிறப்பு நிலை நகராட்சிகள்” எனும் சொற்றொடருக்காக, “சிறப்பு நிலை நகராட்சி மன்றங்கள்” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) விளக்கம் I மற்றும் II–க்காக பின்வரும் விளக்கம் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“விளக்கம்.— (i) ஆம் கூறின் நோக்கங்களுக்காக,–

(a) “மாநகராட்சிகள்” என்பது, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 9/1999) அமைத்துருவாக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் “மாநகராட்சிகள்” என்று பொருள்படும்;

(b) “சிறப்பு நிலை நகராட்சி மன்றங்கள்” என்பது, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 9/1999) அமைத்துருவாக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் நகராட்சி மன்றங்கள் மற்றும் 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் விதிகளின் 3 ஆம் விதியின் கீழ் சிறப்பு நிலை நகராட்சி மன்றங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளவை என்று பொருள்படும்.”;

(c) 5 ஆம் உட்பிரிவின் (a), (b) மற்றும் (c) இனங்களுக்காக, பின்வரும் இனங்கள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்; அவையாவன:–

| | |
|---|---|
| “(a) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 9/1999) அமைத்துருவாக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் மாநகராட்சிகளின் எல்லைகளுக்குள்; | மாதம் ஒன்றுக்கு ஆறாயிரம் ரூபாய். |
| (b) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 9/1999) அமைத்துருவாக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் நகராட்சி மன்றங்களின் எல்லைகளுக்குள்; | மாதம் ஒன்றுக்கு மூவாயிரம் ரூபாய். |
| (c) 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 9/1999) அமைத்துருவாக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்டதாகக் கருதப்படும் பேரூராட்சிகளின் எல்லைகளுக்குள்; | மாதம் ஒன்றுக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்.”; |

(d) (9) ஆம் உட்பிரிவுக்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(10) நிறுவனம் எதனின் வளாகத்தில் அல்லது பிற இடங்கள் எதனிலும் நடத்தப்படும் இசைநிகழ்ச்சி, நாடகம், காட்சி எதனின் அல்லது பிற நிகழ்ச்சி எதனின் மீதான கேளிக்கைகள் வரியானது அனுமதிக்கான ஒவ்வொரு செலுத்தத்தின் மீது பத்து விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்படுதல் வேண்டும்.”.

4. முதன்மைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், 1973 ஆம் ஆண்டு “குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச் சட்டம் (மையச் சட்டம் 2/1974) எனும் சொற்றொடருக்காக, “2023 ஆம் ஆண்டு பாரதீய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா (மையச் சட்டம் 46/2023)” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 23 ஆம் பிரிவிற்கான திருத்தம்

5. முதன்மைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் (i) ஆம் கூறில், “நகராட்சிகள்” எனும் சொல்லுக்காக, “நகராட்சி மன்றங்கள்” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 29 ஆம் பிரிவிற்கான திருத்தம்

6. முதன்மைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவில், “இந்திய தண்டனை தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) 21 ஆம் பிரிவு” எனும் சொற்றொடருக்காக, “2023 ஆம் ஆண்டு பாரதீய நியாய சன்ஹிதாவின் (மையச் சட்டம் 45/2023) 2–ஆம் பிரிவின் (28) ஆம் கூறு” எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 30 ஆம் பிரிவிற்கான திருத்தம்

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்**,
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—

**சட்ட எண்.25/2025.**

**1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.**

இந்திய குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம், 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாகக் குறிப்பிடும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21/1994.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2 ஆம் பிரிவில்,—

(i) (2) ஆம் கூறில், ''தற்செயலாக நடத்தப்படும் தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''இடைக்காலத்தில் நடத்தப்படும் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (19) ஆம் கூறில், ''வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

9 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

13ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின்,—

(i) (1) ஆம் உட்பிரிவில்,—

(a) ''வழக்கமான தேர்தல்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) ''வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (2) ஆம் உட்பிரிவில், ''வழக்கமான தேர்தல்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

18ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

22ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின்,—

(i) (1) ஆம் உட்பிரிவில், ''ஒரு வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''ஒரு பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (2) ஆம் உட்பிரிவில்,

(a) ''ஒரு வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''ஒரு பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) ''வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

29ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின்,—

(i) (1) ஆம் உட்பிரிவில், ''ஒரு வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''ஒரு பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (2) ஆம் உட்பிரிவில்,—

(a) ''ஒரு வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''ஒரு பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) ''வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

31ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. முதன்மைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

43ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. முதன்மைச் சட்டத்தின் 43 ஆம் பிரிவின்,—

(1) (1) ஆம் உட்பிரிவின் (b) கூறில், ''ஒரு வழக்கமான அல்லது தற்செயலாக நடத்தப்படும் தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''ஒரு பொது அல்லது இடைக்காலத்தில் நடத்தப்படும் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில், ''வழக்கமான தேர்தல்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3) ஆம் உட்பிரிவில், ''ஒரு வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''ஒரு பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (5) ஆம் உட்பிரிவில், ''வழக்கமான தேர்தல்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

261 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 261 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''வழக்கமான தேர்தல்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

261—A பிரிவிற்கான திருத்தம்.

11. முதன்மைச் சட்டத்தின் 261—A பிரிவில், ''வழக்கமான தேர்தல்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''பொதுத் தேர்தல்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**சி. ஜார்ஜ் அலெக்சாண்டர்,**
*அரசு செயலாளர்,*
*சட்டத்துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.